**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 135 of 2024

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:4

| | | | |
|---|---|---|---|
| Name | சின்னச்சாமி | Caste | |
| Father/Husband's Name | பெரியசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)

**முதல் விசாரணை : –**

நான் கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 17.03.2022 அன்று காலை 09.20 மணிக்கு, நானும், வைரமுத்து என்பவரும் திருவல்லிபுத்தூர் செல்வதற்காக நத்தம்பட்டி வழியாக சென்று கொண்டிருக்கும் பொழுது, காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் வைரமுத்து என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் திருவில்லிபுத்தூருக்கு சென்றதாக சொல்லி உள்ள நிலையில் எதற்காக நான் சென்றேன் என்றால் பெயிண்ட் அடிக்கும் வேலை செய்வதற்காக நான்

சென்றேன். நான் வெள்ளை பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காவலர்கள் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு